# அம்பலம்

செப்ரெம்பர் 2002

கப்பலேறுவாயோ - அடிமைக்
கடலைத் தாண்டுவாயோ
குப்பை விரும்பும் நாய்க்கே
கொற்றத் தவிசுமுண்டோ.. ..?

மகாகவி சுப்பிரமணியபாரதியார்



15/-

ஊர்கூடித் தேர் இழுப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரங்கேறுவோர்

- **முகாமை :**
  கு.கிருஷாந்தன்
- **ஆசிரியர்கள் :**
  த.பிரபாகரன்
  கு.லக்ஷ்மணன்
- **இணை:**
  என். தனுசுஜன்
  வி.உதேஷ்

**முகவரி:**

305, பலாலி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

## புதிர்ப்போட்டி – 01 இன் முடிவு

சரியான விடை: **திருநெல்வேலி**

ஏராளமான வாசகர்கள் சரியான விடையை எழுதி அனுப்பியிருந்தார்கள். அதையிட்டு நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். குலுக்கல் முறையில் மூவர் பரிசிற்குரியவர்களாக தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். அவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு..

1. அ. பவன்ராஜ், கரணவாய் கிழக்கு, கரவெட்டி
2. அ. சகினா, ஆடியபாதம் வீதி, நல்லூர்.
3. இ. சிந்துஜா பருத்தித்துறை வீதி, நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர் :- 1 அம்பலம் ஊர்:- 2


"ஊர் கூடித் தேர் இழுப்போம்"

இது இரண்டாவது சந்திப்பு!
சவால்கள் பலவற்றைச் சமாளித்தபடி
அம்பலம் என்ற சிறு நாற்றிலிருந்து
இரண்டாவது துளிர் கிளம்பியிருக்கின்றது.
விற்பனைச் சமர்க்களத்தில் நாம்
வாளெடுத்து வாகை சூடுவதற்கு
தோள்கொடுத்துதவியோருக்கு என்றும் நன்றியுடையோம்!
எதிர் பார்த்ததைக் காட்டிலும்
அறுவடை இலக்கினை
அம்பலம் எட்டியிருப்பதை
அறிந்து சந்தோசித்தோம்.
எனினும் அம்பலம் இதைவிடவும்
இன்னும் பலம் பெற முயற்சிக்கின்றது.
வாசகர்களும், படைப்பாளிகளும்
சுட்டிக் காட்டிய சிலகுறைகள்
இவ்விதழில் நிரப்பப்பட்டிருக்கின்றன.
இன்னும் மாற்றங்கள் பரிணாமம் பெறும்.
"இலக்கியக் கனதி" என்ற
இலக்குப் பற்றியும் அதிக அக்கறை
கொள்வதால் கனதியான படைப்புக்களை
புதிய, பழைய ஆக்க கர்த்தாக்களிடம்
அம்பலம் வேண்டுகின்றது.
அனுப்பும் ஆக்கங்களோடு உங்கள் பெயர் முகவரியை
தெளிவாய் குறிப்பிடுவது எமக்கு வசதியாய் இருக்கும்.
யாழ் இலக்கிய வீதியில் பல முன்னெடுப்புகள் நிகழ்கின்றன
அவை எமக்கு பெரியதொரு பின்பலம் என்பதில் ஐயமில்லை.
புதிதாய் பல இதழ்கள் புறப்பட
இருப்பதாய் அறிகின்றோம்: அகமகிழ்கின்றோம்!
மாணவர்கள் பெருமெடுப்பில் அம்பலத்தில்
எழுதமுற்பட்டிருப்பது ஆனந்தமாயிருக்கின்றது.
அம்பலம் அவர்களுக்கு எப்போதும் ஆதரவு தரும்.
இன்னும் எமக்கும் புலப்படாத குறைகள் அம்பலத்தில்
இருப்பின் சுட்டிக் காட்டுங்கள்: திருத்தப்படும் !
இவ்விதழில் மாணவர்களுக்கு என்று
தனியாக "அரிவரி" என்ற பகுதி
திறக்கப்பட்டுள்ளது

வாசகர்களுக்காக இன்னும் பல
புதிய பகுதிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன!
இதற்கெல்லாம் உங்களின்
ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றோம்!

-அக்கறையோடு அம்பலத்தான்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிசாசுகளின் நிறம் கறுப்பு

இப்பொழுதெல்லாம் நான் கறுப்பு
பற்றி பேசவும் பார்க்கவும்
விரும்புவதில்லை.
அதற்கு துணிவும் என்னிடமில்லை.
அதில் இருந்து எப்போதும்
தூர விலகியிருக்கவே முயல்கின்றேன்.
ஏனெனில் கறுப்பு அபாயமானது.

சுடுகாட்டின் இடுக்குகளிலும்
பொட்டல் வெளிகளிலும் என்
முகங்களை மறைத்து
முகவரிகளைத் தொலைக்கவே
அது விரும்புகின்றது.

என் தலைகளைக் கோதிவிடவும்
சோறு போடவும்
எனக்கு புத்தகங்களை தரவும்
அது எப்போதும் விரும்புவதில்லை.
மாறாக
என் வாழக்கையினை துண்டுகளாக்கி
வேறுபடுத்தவும் என்னை
விகாரப்படுத்தி அழகு பார்ப்பதற்கும்
தான் விழைகின்றது.

இதனால் கறுப்பு பற்றிய
பல கேள்விகளை உண்டாக்கி
விலகிக் கொள்ளவே விரும்புகின்றேன்.

-சாதுரியன்.-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாட்டில் அரங்கு
## (N.G.O செயற்பாட்டில் அரங்கு)

**-அறுவான்-**

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதின் பின் யாழ்ப்பாண - கண்டி வீதி திறக்கப்பட்ட முக்கியமான நிகழ்வு நடைபெற்றது. பல ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு நின்று பாதை திறக்கப்பட்டதையும் புலிகள் யாழப்பாணத்திற்குள் உள் நுழைந்த -தததையும் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்கள். பாதை திறப்பு யாழ்ப்பாண மக்களுக்கு நல்லதொரு தீர்வைத்தரும் என்று பலரும் நம்பினர். திறக்கப்பட்ட பாதையூடு தீர்வைத்தரும் மீட்பர்கள் வருவார்கள் என்று பார்த்திருந்தனர். ஆனால் அலையலையாய் வியாபாரக் கண்களும், வியாபார மூளைகளும், வியாபார வண்டிகளுமே அதிகம் உள்நுழைந்தன. முதலாளிகள் பலர் தமது பொருளுக்குரிய "நுகர்வுச்சந்தையை" பார்ப்பதற்காகப் படையெடுத்-தார்கள். இவர்களுக்குப்பின் சமாதானம் என்ற சுலோகம் ஏந்திய வாகனங்களும், கொடிகளை உயரே பறக்கவிட்ட அதிநவீன வாகனங்களும், வெள்ளைத் தோலுடைய ஐரோப்பியரும், வெள்ளைத் தோல் போர்த்திய கறுப்பரும் எனப் பலர் ஓடோடி வந்தனர். போரினால் சிதைக்கப்பட்ட யாழ்ப்பாணத்தைப் பார்ப்பதற்காக இவர்களுடன் பாதயாத்திரை என சமய சந்நியாசிகளும் நாகவிகாரை பார்க்கப் பொதுமக்களுமெனப் பலரும் வந்தார்கள்; வந்துகொண்டிரு-க்கின்றார்கள். கோயிலுக்கு வந்தவர்கள் தவிர மற்றையோர்சுய இலாபம் தேடும் வியாபார நோக்குடனேயே யாழ்ப்பாணம் வந்தார்கள்; வந்து கொண்டிருக்கிறார்கள். இன்று யாழப்பாணத்தின் மூளையை இயங்க விடாது செய்வதற்காக வெள்ளைத் தோலுடைய மனிதாபிமானிகளும் பல் தேசியக் கொம்பனிகளும் குறிப்பாக இந்தியாவின் வர்த்தக நிறுவனங்களும் சிந்திக்கத் தொடங்கிவிட்டன.

புதிய காலனித்துவத்தின் வெளிப்பாடாக தற்சமயம் யாழ்ப்பாணத்திற்குப் படையெடுத்துள்ள அரசசார்பற்ற நிறுவனங்களை இதில் முக்கியமாகக் குறிப்பிட முடியும். தற்சுயத்தோடு காணப்பட்ட யாழ்ப்பாணத்தை சிதைப்பதற்காக மனிதாபிமானம், ஜனநாயகம், மக்கள் பங்களிப்பு என்ற சொற்பதங்களோடும் பல கோடி ரூபாய்களோடும் இவர்கள் கால் பதித்துள்ளார்கள். இனிக்கப் பேசி வேர்களை அறுக்கப் போகின்றார்கள் என்பதை யாழ்ப்பாணத்தில் சிந்திக்கின்ற பலர் உணரத் தொடங்கிவிட்டார்களா. இந்த நிறுவனங்கள் தொடர்ந்தும் மயக்க மாயா மந்திரங்களோடு நின்று நிலைத்து விட முடியாது என்பதற்கு இந்தத் துளிர்களே போதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மக்களின் பெயரால் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் பல கோடி ரூபாய்களைப் பெற்றுக்கொள்கின்றன. அந்நிதி யாழ்ப்பாண மக்களுக்கு முழுமையாக சென்றடைகின்றதா? என்ற கேள்வி எழுகின்றது. மிகச் சொற்ப அளவு பணம் மட்டுமே மக்களைச் சென்றடைகின்றது என்ற குற்றச் சாட்டுகளும் உண்டு. இன்று திடீரென புற்றீசல்கள் போல் பெருகிவிட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்கின்ற அல்லது ஒழுங்குபடுத்துகின்ற ஒரு அமைப்பு அவசியமாகின்றது. குறிப்பாக அரசசார்பற்ற நிறுவனங்களின் கடந்த கால செயற்பாடுகளை மீள்பார்வைக்குட்படுத்தி மதிப்பீடு செய்தல் அவசியம். செலவழிக்கப்பட்ட பணத் தொகையும் பயன்படுத்தப்பட்ட தொகையும் கணக்கில் எழுதப்படுதல் முக்கியமானது. இந்த மதிப்பீடு உண்மையாகவும் நேர்மையானதாகவும் மேற்கொள்ளப்படுவதோடு அதன்படி எதிர்காலத்தில் அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் வடிவமைக்கப்படுதலும் அவசியம். பலருக்கு நன்மை செய்கிறோம் என்ற சுலோகத்தின் கீழ் சிலர் பயனடையும் நிலை தவிர்க்கப்படல் வேண்டும். தற்போது யாழ்ப்பாணத்தில் பல 'தேசிய மட்ட' அரசசார்பற்ற நிறுவனங்கள் யாழ்ப்பாண மக்களுக்காக இயங்குவதற்கு புதிய புதிய அலுவலகங்களைத் திறந்துள்ளன. இவற்றில் பல கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தின் பெயரால் பணத்தை எடுத்து வடபகுதிக்கு வெளியே அப்பணத்தை செலவழித்து இலாபம் தேடிக்கொண்டவை.

இவ்விடயங்களை யாழ் மாவட்டத்திலியங்கும் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம், பொது அமைப்புக்கள், ஊடகத்துறையினர் இணைந்து கூடிய அக்கறையுடனும் விழிப்புடனும் துரிதமாகவும் கவனத்திற்கு எடுத்து மக்களை இதுதொடர்பாக விழிப்படையச் செய்யும் பணியை ஆரம்பிக்க வேண்டும். வழிப்பு நிலைக்கு இட்டுச் செல்ல வேண்டும்.

இந்தச் சூழ்நிலையில் "அரங்கு " என்ற புதிய துறை அரசசார்பற்ற நிறுவனச் செயற்பாட்டில் கடந்த நான்கு ஐந்து ஆண்டுகள் பயன்படுத்தப்படுவதும் "அரங்கு " (Theatre)என்ற சொற்பதம் அரசசார்பற்ற நிறுவனச் செயற்பாட்டில் அடிக்கடி பயன்படுத்தப்படுவதும் பற்றிப் பேச விழைகிறேன்

(மிகுதி அடுத்த இதழில்)

உங்கள் ஆக்கங்கள் விமர்சனங்கள் என்பவற்றை ஆர்வத்தோடு அம்பலம் எதிர்பார்க்கின்றது அவற்றை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:-

அம்பலம், 305, பலாலி வீதி

யாழ்ப்பாணம்., திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூங்கும் துப்பாக்கிகள்

எங்கள் சொந்தக்காரர்கள் .. .. ..
எனது நண்பர்கள் .. .. ..
பக்கத்து வீட்டுக்காரர்.. .. ..
பாவம் வாத்தியார் .. .. ..
போர்க்களத்துப் புலிகள்
ஏன் ..?
குழந்தைக் கொழுந்துகளென்று எத்தனை தமிழர்களை
எண்ணியெண்ணிச் சுவைத்தன
துப்பாக்கிகள் !

இனி இப்போது
அநியாய வேள்விகள் செய்த
அந்நியத்துப்பாக்கிகளும்
ரத்த வாசம் நுகர்ந்த கத்திகளும்
மயக்கத்தில் .. .. (?)
ஒப்பந்தத்தின் தாலாட்டில்
கண்ணயர்ந்து
தூக்கத்தில் .. .. .. (?)

நாளையும் எழுந்திடாதபடி
அவை நித்திய தூக்கம் செய்யட்டும்



நேற்றோ
நாமிருந்தது
மரணத்தின் குகைக்குள்
எம்மைச்சுற்றி
மனிதப்பிணங்களின் அழுகிய நாற்றத்தில்
ரத்த வெடிலில்
செம்மணிச் செய்திகளை
கேட்டபடி .. ..
இன்றிருப்பதோ சில
சமாதானப்பூக்களின் வாசத்தில்
எங்கள் வேர்களை எரித்தது
அந்நியரின் குண்டு மழை.
எங்கள் சந்தோஷச் சந்திரனை
கறை படிய வைத்தது.
அவர்களின்
பீரங்கிப்புகைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டாம்
இந்த வேர்களுக்கு
நெருப்பே மழையாய் வேண்டாம்

❋ ❋

வேண்டாம்
இந்தப்பூக்களின் மேல்
திராவகப் பனித்துளிகள் வேண்டாம்.

❋ ❋

இனி
தூங்கு .. .. நன்றாகத் தூங்கு
தமிழனின்
புதைகுழி மண்ணும்
மரியாதைக்குரியது என்று
எண்ணியபடி தூங்கு

❋ ❋

ஒப்பந்தம் காப்பாற்றப்பட்டால்
துப்பாக்கிகள் இல்லை.
எங்கள் தோட்டத்து
முட்களிலும் பூக்கள் !
சருகுகளிலும் சந்தன வாசம்!!

என். தனுசுஜன்
சண்டிலிப்பாய்

இன்னும்பலம் பெற.. ..பின்பலமாகுங்கள்
ஒருவருடச் சந்தா - ரூபா -180.00
ஆறுமாதச் சந்தா ரூபா 90.00
(தபாற் செலவு உட்பட)
சந்தாவினை காசோலையாகவோ
காசுக்கட்டளையாகவோ பணமாகவோ அனுப்பி
வைக்கலாம் அதன்பின் மாதம்தோறும் அம்பலம்
உங்கள் வீடு தேடி வரும்

(ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துளிக்கதை

# – நேரம் போட்டுது –

கு. லக்ஷ்மணன்

ஏழுமுறை ஒலித்து ஒய்ந்தது சுவரில் தொங்கிக் கொண்டிருந்த என்பாட்டன் காலத்து மணிக்கூடு. இடம் பெயர்ந்து போனதில் அது பழுது பட்டிருந்தது. நேற்றுத் தான் திருத்திக் கொண்டு வந்து கொழுவினேன். நல்லவேளை சரியான நேரத்துக்கு எழுப்பி விட்டது.

"ஏழு மணியாகிப் போச்சு .. .. எழும்படா இண்டைக்கு போகேல்லையா.. " அம்மா.

அவசரமாய் எழுந்தேன். சூரிய வெளிச்சம் யன்னலைத் தாண்டி வந்து என் கண்களை கூசியது.

முற்றத்து வேம்பில் தொங்கி ஒரு குச்சை முறித்து வாய்க்குள் வைத்துக் கொண்டேன்.

"அக்கா பேப்பர்" கேற்றில் பெடியன் நின்றிருந்தான். வாங்கிப் பார்த்தேன். அரசியலை அலசிக் காயப் போட்டிருந்தார்கள். உள் பக்கம் உலக நடப்பு, பின்னால் தியேட்டர் விளம்பரங்கள். திடீரென்று ஏதோ ஞாபகம் வந்தவனாய் ஆங்கிலப் படத்தின் கதாநாயகன் போலே திடீரென்று உஷாராகி கிணற்றடிக்கு ஓடினேன். அள்ளித் தலையில் ஊற்ற "ஜில்" என்று இருந்தது. சூட் சேட்டை அயன் பண்ண மறந்து விட்டேன். "அம்மா அந்த சேட்டை ஒருக்கா அயன் பண்ணுங்கோ"

"கரண்ட் கட்டாப் போச்சு .. .. நீ கெதியாய் வா" அம்மா.. சமையல் செய்து கொண்டே அவசரப்படுத்தினாள். இந்தக் கரண்ட் காறங்களே இப்படித்தான் பொறுத்த நேரத்தில காலை வாரிப் போடுவாங்கள்.

சேட்டை மாட்டிக் கொண்டு தலையை சீவினேன். கண்ணாடி என்னை அழகாய் காட்டியது. தோள்களை தூக்கி விட்டுக் கொண்டேன். ஒரு மெடிக்கல் ஸ்ருடன்ற் களை வீசியது. அம்மாவும் இதைத்தானே அடிக்கடி சொல்லி ஆசைப்படுகின்றா. ஆனால் எனக்கு 'பாங்க்'ல் வேலை செய்யத்தானே விருப்பம். எவ்வளவு கஷ்டப்பாட்டாலும் இந்த முறை... ..

"கெதியா வந்து சாப்பிடு தம்பி" - அம்மா-

மணிக்கூட்டு முட்கள் என் இதயத்தில் இருந்து துடிக்க ஆரம்பித்தன.

"இப்ப வேணாம் வந்து சாப்பிடுறன்" - நான் "பசியோட போனா ஒண்டும் செய்ய ஏலாது அவ்வளவு தூரம் சைக்கிள்ள போறனி. இந்தா காசு .. .. இன்ரவலுக்கு ஏதும் வாங்கிச் சாப்பிடு"

வாங்கிப் பாத்திரப்படுத்திக் கொண்டு வேகமாய் மிதித்தேன். நல்ல வேளை சென்றிகளில் இறங்கும் வேலை இல்லை;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது அரை மணித்தியாலங்கள் பிந்தித்தான் போக வேண்டியிருக்கும்.

நல்ல காலம் இன்னும் கேற் பூட்டவில்லை.

இறங்கி உருட்டிக் கொண்டு ஓடிப்போய் சைக்கிளை பாக்கில் விட்டேன்.


நான் உள்ளே கதவைத் திறந்து சென்ற போது எல்லோரும் அமைதியாக வரிசையாக அமர்ந்திருந்தனர்.

ஒரே இருட்டு. நல்லவேளை இன்னும் தொடங்கேலை. சந்தோசத்தோடு நான் எனது இருக்கையில் அமரவும் "பாபா" பட டைட்டில் ஆரம்பிக்கவும் சரியாக இருந்தது.

(யாவும் கற்பனை)

# புதிர்ப்போட்டி - 02

கீழே உள்ள உருவங்களின் பெயர்களை எழுதுங்கள். இப்பெயர்களில் ஒவ்வொன்றில் இருந்தும் ஒரு எழுத்தைச் சேர்ப்பதன் மூலம் ஒரு விடுதலைப் போராளியின் பெயரைக் கண்டு பிடித்து எழுதி அனுப்புங்கள்.



தடயம்: இவர் தனியாள்தான். ஆனால் இவர் பெயரில் ஒரு பெரும் படையணியே உண்டு

குறிப்பு: 16 வயதிற்குட்பட்டவர்கள் மட்டும் பங்கு பற்றலாம். பெறுமதியான பரிசு உண்டு

முடிவுத் திகதி 30.9.2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்னலிற் தெரிந்தவை

அம்பலத்திற்கு, கலை இலக்கியப்பலம் சேர்க்கும் பொருட்டு தென்னிலங்கைக்கு ஓர் கலைப்பயணம் செய்திருந்தோம். எல்லோரையும் போலவே தலதாமாளிகை, கண்டி, ஹற்றன், காலி, கொழும்பு, கதிர்காமம் என்று நாம் சென்று பார்த்த இடங்கள் ஏராளம்தான். எனினும் எங்கள் சிந்தனையில் பொறிதட்டிய சில சம்பவங்களை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

அரும் பொருட்காட்சி சாலைகளில் அவ்வூர் களின் கலை படைப்புக்கள் பண் பாட்டுத் தொல் பொருட்கள் எவ்வளவு செலவில் பராமரிக்கப்படுகின்றன, என்பதனை கண்டேன். எங்கள் சங்கிலியன் மந்திரவாசலும் சேனாதிமனையும் என் கண்முன்னே வர அழுகை வந்தது. ஏன் நாம் இவற்றை கண்முன்னாலேயே அழிய விடுகின்றோம்? கோயில் கோபுரத்திற்கும் ஒலி பெருக்கிகளுக்கும் கொட்டிக் கொடுக்கும் வள்ளல்கள் இவற்றை கவனிக்க மாட்டார்களா? அல்லது நம்மூர் ஆசனதாரிகள் இவற்றை கவனிக்கும் எண்ணம் இல்லாதவர்களா?

இதை விடவும் ஒரு சோகமுண்டு. எங்கள் முதாதையர் காலத்து சிற்ப வேலைப்பாடுடைய கதிரைகள், கதவுகள் பெருந்தொகையில் தென்னிலங்கை நேக்கி நகர்கின்றன. பழுதடைந்த ஆலயத்தின் வாகனங்கள் நாளாந்தம் 2,3 லொறிகளில் செல்வதைப் பார்க்க எமக்கு நெஞ்சு பொறுக்குதில்லையே! இந்த நிலை கண்டு .. ..!

உண்மையில் கலாமன்றங்கள், பண்பாடு பேணும் நிறுவனங்கள் ஏன் கலை இலக்கிய இதழ்கள் கூட இது பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்த வேண்டும் இன்றைய நிலையில் அதுவே அவற்றின் பிரதான கடமையும் கூட.

இன்றைக்கு கதிர்காமம் எவ்வாறு எங்கள் பரம்பரியம் மறந்து காணப்படுகின்றதோ வேல் உருவம் அங்கு எப்படி அரசமிலை உருவாகியதோ அப்படி ஒரு அபாயத்தை நாம் சந்திக்க வேண்டி வரும். எங்கள் சுயம் அழிவுப்பாதையில் செல்லும் இச் சந்தாப்பங்களில் நாம் விழிப்பாய் இருக்க வேண்டும். கதிர்காமத்து காவடி ‘பைலா’ வாகி இருந்தது கண்டு பயந்தேன். அன்னியக் கோயிலை காணும் உணர்வுடையவனாகவே இருந்தேன். அழுகை வந்தது. கோபம் முருகனிலும் வந்தது. அது அரசியல் வாதிகளால் அதிகார பிசாசுகளால் இனவாதக் காரணம் கொண்டு செய்யப்பட்ட திட்டமிட்ட செயல். எங்கள் சுயங்களை அழிக்க எழுந்த பாரிய படையெடுப்பு. நாங்கள் அதில் தோற்றுத்தான் போனோமா?

இல்லை. பொறுத்திரோம். ; இனிமேலும் எங்கள் சுயங்கள் சுரண்டப்படுவதைக் கண்டும் எம் மக்கள் அறியாமல் அவற்றை விற்பதைக் கண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயவுசெய்து மந்திரிமனை, சங்கிலியன் வாசல் போன்றவற்றைப் பேணி அதனை ஒரு தொல்பொருட் காட்சி சாலையாக்குங்கள். தொலைந்து போகும் எம் பாரம்பரிய பொக்கிசங்களை அதிலே பேணிக் காப்பாற்றுங்கள். வருகிற சந்ததிக்கு எம் காலத்தின் மேல் ஓர் பற்றினை ஏற்படுத்திய பாக்கியசாலிகள் நீங்களாவீர்கள்.

இது இதற்குரிய பொறுப்பான ஆசனங்களில் இருக்கும் அருமைமிகு அதிகாரிகளிடம் நாம் விடுக்கும் சுயநலத்தோடு கூடிய கோரிக்கை!.

-ஆதங்கன்-

---

**அறையில் ஆடியது**

# இருப்பு (?)

இளமையை நாடி
வசந்தத்தை தேடித் தொடு முன்னரே
என் வாழ்க்கை தொலைந்து போனது!
வாழ்வு வெறுத்து விட
மரணம் மகிழ்ச்சிக்குரியதாயிற்று:
பொறுமை பொசுங்கிப் போனது:
தவிக்கும் என் உயிர்
இன்னமும் வாழ்வின்
தாகத்தோடு.. ..!
நான் தேடும்
உயிர்ப்(பூ)பு என்னில்
எப்போது?
எனக்கே சொந்தமாய் .. ..!
நான் வாடி உதிர்ந்த மலர்?
என்னில்
இப்போது வசந்தமில்லை
வாசமுமில்லை.. ..!

-செந்தூரி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன்?

ஈரமும் மண்ணும் கண்டாலே
வெட்டுத்துண்டமாய் கிடக்கும்
பூஞ் செடியின் சிறுகம்பு
வேர் விட நாட் பார்க்கிறது!

வெறுந்தரையாய் வரண்டு கிடந்த நிலம்
ஒரு நாட் சிறு தூறலுடனேயே
பசுந்துளிர் முளைகளோடு
புன்னகைக்கின்றது!

ஒளிர்தலுக்கான வாய்ப்பைக் காத்திருந்து
கனிந்த காலத்தே
வாழ்வினைத் துய்க்கிறது இயற்கை!

அறிவு தேடி புத்தி செதுக்கி
உணர்வு கனியும்
இதயமேந்திய
நாங்கள் மட்டும் ஏன்
அதிர்ச்சி கண்ட
மர அட்டை போல
ஒடுங்கிச் சுருங்கி .. .. ..?

-நல்லூரார் ந. சத்தியபாலன்-

## வண்ணமும் எண்ணமும் –2

இம்மாத அம்பலம் அட்டைப் படத்தினைப் பார்க்கும் போது உங்கள் மனதில் எழுகின்ற எண்ணங்களை கவிதையாக தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்புங்கள் சிறந்த கவிதையொன்றிற்கு ரூபா 100 பரிசாக வழங்க எண்ணியுள்ளோம். சிறந்த கவிதைகள் அம்பலத்திற் பிரசுரமாகும் உங்கள் ஆக்கங்கள் வந்து சேர வேண்டிய கடைசித் திகதி 30.09.2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கேற்றம்

# நானும் கண்டுபிடிப்பன்

பவித்திரன் - நாவற்குழி-

எனக்கு கனநாளா ஒரு ஆசை. சும்மா அரசியலிலை குதிக்க வேணுமெண்டோ ரஜனி மாதிரி படம் நடிக்க வேணுமெண்டோ ஆசையில்லை. அதைவிடப் பெரிய ஆசை வேறையொண்டுமில்லை. நான் ஒரு விஞ்ஞானியாக வரவேண்டுமெண்டு தான்.

என்ன என்னை ஆச்சரியமாகப் பாக்கிறியள்?

என்னைப் பார்க்க நக்கலாய் கிடக்கா உங்களுக்கு? என்னைப்பற்றி முழுசாய்த் தெரிஞ்சா உப்பிடி சிரிக்க மாட்டியள். உங்களுக்கென்ன தெரியும்? சொல்லுறன் கேளுங்கோ.

நான் விஞ்ஞானியாய் வாறதுக்கு என்னணெல்லாம் முயற்சி செய்தனான் தெரியுமே? சின்னனில எடிசன் முட்டையை அடைகாத்ததை படிச்ச பிறகு பள்ளிக்கூடம் போறேலை. எடிசனும் பள்ளிக்கூடம் போகாமல் தானாம் விஞ்ஞானியாய் வந்தவர். அதால விஞ்ஞானியாய் வரவேணுமெண்டா பள்ளிக் கூடம் போகக் கூடாதெண்டு கண்டு பிடிச்சு வீட்டிலை நிண்டிட்டேன். அப்ப அம்மா சொல்லுவா “கோழி மாதிரி வீட்டை அடை காத்துக் கொண்டு இருக்கிறான். பள்ளிக்கூடம் போறேல்லை” எண்டு.

வெற்றி. அவன் முட்டையைத்தான் தனியே அடைகாத்தான். நான் வீட்டையே அடைகாத்தன். அவனை விட நான் பெரிய விஞ்ஞானி. எனக்கு நல்ல சந்தோசம்.

அதுக்கு பிறகு திரும்ப வீட்டுத் தொல்லையாலை பள்ளிக்கூடம் போனன். அங்க போனதில எனக்கு பெரிய சந்தோசம்; நியுட்டன் என்ற விஞ்ஞானியை பற்றித் தெரிஞ்சுது. நல்லதாப்போச்சுது நானும் கண்டு பிடிப்பம். யாழ்ப்பாணத்தில அப்பிள் மரத்துக்கு எங்க போறது? மனமிருந்தா மார்க்கம் இருக்கு. எங்கடை மாமரத்துக்கு கீழே பாயை விரிச்சுக் கொண்டு அதிலே கிடந்து யோசிக்கிறன். என்னத்தைக் கண்டு பிடிக்கலாம்?. யோசிக்கிறன் யோசிக்கிறன் ஒண்டும் தெரியேலை.

பாயிலை கிடந்தபடி கண்ணை மூடிக் கொண்டு யோசிக்கிறேன். “அட மடையா”! அப்பிள் விழுந்ததாலே தானே நியூட்டன் கண்டு பிடிச்சவர். உனக்கென்ன விழுந்தது கண்டு பிடிக்க. மாங்காய் காய்ச்சுக் கிடக்குது தான். ஆனால் அணில் கொந்தினாத்தானே விழும் யோசித்துக் கொண்டே படுத்திருக்கிறன். விழுந்திட்டுது. விழுந்தது தான் விழுந்தது. நிலத்திலே விழுந்துதே? தலையிலையல்லோ விழுந்திட்டுது!

முழிச்சுப் பார்க்கிறன். என்னைச் சுற்றி நிறையப் பேர். நான் ஒண்டும் கண்டு பிடிக்கேல்லையே! ஏன் இந்தளவு சனம்? அட ஆஸ்பத்திரி. என்ரை தலையிலை கட்டு. அது நடந்ததென்னண்டா கொஞ்சப் பெடியள் வேலிக்கு அங்காலை நிண்டு மாங்காய்க்கு எறிஞ்ச கல்லுத்தான் விழுந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்ச நாளைக்கு பிறகு திரும்பவும் பள்ளிக்கூடம் போனன். ரொக்கட்டிலை மனிசன் சந்திரனுக்கு போனதைப்பற்றி படிப்பிச்சார் மாஸ்ரர். என்ரை விஞ்ஞான ஆர்வம் விடேல்லை. ரொக்கட் சந்திரனுக்கு அனுப்பிறது தான். முடிவெடுத்தன்.

முதல் கடதாசியில ரொக்கட் செய்தன். அது சீனா தயாரிச்ச ஒலியின்ர வேகத்திலே பறக்கிற விமானம் போல கொஞ்ச தூரத்திலேயே விழுந்துட்டுது. விடாமுயற்சி விஞ்ஞானத்துக்கு அவசியம். திரும்ப திரும்ப முயற்சி செய்தன். சின்ன முன்னேற்றம் தான். எண்டாலும் அதுவே எனக்குப் பழகிப் போச்சுது. எனக்குத் தெரியாமலே நான் ஒற்றை கிழிச்சிடுவன்.

அண்டைக்கு நான் வகுப்பிலை இருக்கிறன். எல்லோரும் பயங்கரமா விழுந்து விழுந்து சிரிக்கிறாங்கள். என்ர கன்னத்தில ஒரு இறுக்கு விழுந்தாப் பிறகு தான் தெரிஞ்சுது. நான் அடிச்ச றொக்கற் சேரின்ற காதிலை செருகுபட்டு கிடக்குது எண்டு.

இதுக்கு பிறகு கொஞ்சநாள் விஞ்ஞானத்தில ஈடுபடேலை. அண்டைக்கு இவர் அப்துல் கலாம் எண்ட இந்திய விஞ்ஞானி ஜனாதிபதியா வந்தாப் பிறகு எனக்கு ஜனாதிபதியா இல்லை; விஞ்ஞானியா வர வேணும் எண்ட ஆசை முத்தி போச்சுது.

யோசிச்சு பாக்கிறன். அப்துல் கலாம் விஞ்ஞானியா என்னெண்டு வந்தவர். எனக்கு விளங்குது. அவரின்ரை தலைமயிர் வளர்ந்திருக்கு. அதாலை மூளையும் வளர்ந்திருக்கு. நான் தலைமயிரை வெட்டுறதாலை மூளையும் வளரேல்லை. யாழ்ப்பாணத்தில பொம்பிளை பிள்ளையள் கனபேர் கம்பசுக்குப் போறதுக்கு இது தான் காரணம். (எல்லாருக்கும் நீட்டு தலை மயிர் இருக்கு)

நானும் தலைமயிரை வளக்க வெளிக்கிட்டன். எனக்கு பொம்பிளையளை போல நல்ல பெரிய மயிர். அன்டைக்கு பிறகு எனக்கு பின்னாலை நிறைய பொடியள் வர வெளிக்கிட்டாங்கள். எனக்கு மீசையுமில்லை பொம்பிளை எண்டு நினைச்சு கடிதம் தந்து கரைச்சல் தர வெளிக்கிட்டாங்கள். எங்கட நாட்டிலை ஒருத்தனையும் விஞ்ஞானியா வரவிடமாட்டாங்கள் போலை. பேசாம தலைமயிரை வெட்டிட்டன்.

இருந்து யோசிக்கிறன். என்ன கண்டு பிடிக்கலாம்?

"ஏன்ரா சோம்பேறி! பன்னாடை தலையா."

கவுண்டமணியின்ரை பேச்சு! படம் ஓடுதோ? என்ன செந்திலின்ரை குரலை காணேலை? என்ரை முதுகு நோகுது!!!

திரும்பி பார்க்கிறன். என்ரை அண்ணை நிக்கிறான்.

"ஏன்ரா நாயே எடுக்கிற மார்க்ஸ் அஞ்சும் பத்தும் அதுக்க சும்மா இருந்து யோசிக்கிறாய்? புத்தகத்தை எடுத்துபடிக்கிற வழியை பாரடா"

இஸ்ரேலிடம் அடிவாங்கிய பலஸ்தீனம் போல நிலை குலைந்திருந்தேன் நான்.

அப்ப விஞ்ஞானி.. ..?

-யாவும் கற்பனை-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உன்னைப்பற்றிய ஞாபகங்கள்

ஆழப்புதைந்தும்
நிலவிலெழும் சிறு நிழலாய் வெளிறியும்
உன்னைப் பற்றிய ஞாபகங்கள்
நீக்கமுறுவதாய் துயருறுகின்றேன்.

உன்னுடனான
என் பிணைப்பின் இழைகள்
வீரியம் இழந்ததாய் வியாத்தமாய் இருந்ததாய்
ஞாபகக்குழியின்
தொன்மங்களின் வாசிப்பு அரற்றுகிறது.

உன் முகத்தின் நிழல்
இச்சிறு நாளில்
மனத்திரையில் அழியும்படிக்கு
பாரதூரமாயிற்றா பரிச்சயமின்மை.

சிதை மூட்டித் திரும்பிய கணங்களின் துயரம்
நீங்கிய சிறு நிமிடங்களூடே
நிர்மூலமாக்கப்பட்டதை எங்கே சொல்லி அழ?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிவரி கல்வி

கல்வி என்பது கல்லுதல் என்று பொருள்படும். அதாவது உள் அகழ்தலாகும். மறைந்து கிடப்பதனைத் தோண்டி அல்லது கிண்டி எடுத்தலாகும். எடுக்க எடுக்க குறையாத செல்வத்துள் ஒன்று தான் கல்வியாகும். கல்லின் உள்ளே தீ இருப்பது போல அறியும் ஆற்றலும் மனிதனிடத்தே இயல்பாக அமைந்திருப்பது தான். அவை சாதாரணமாக மறைந்து கிடக்கின்றன. இத்திரையை அகற்றுவதே கல்வியாகும். இதனையே சுவாமி விவேகானந்தர்...

"மனிதனுக்குன் புதைந்திருக்கும் பூரணத்தை வெளிப்படுத் - துவதே கல்வி" எனக் கூறியுள்ளார். தோண்டினால் தான் மணற்கேணியில் நீர் வரும் அதேபோல் தான் மனிதனுக்கும் அறிவு சுரக்கும் இதனையே வள்ளுவர் பின்வருமாறு கூறுகின்றார்.

"தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத்தூறும் அறிவு"

ஆகவே கல்வி எம்மைத் தேடி வரமாட்டாது. நாம் தான் கல்வியைத் தேடிச் செல்ல வேண்டும். நாம் எம்மிடத்தில் கல்வியை வளர்த்துக் கொள்ள வேண்டும். நாம் சிறு வயதிலேயே கல்வியில் முன்னேறி வருதல் வேண்டும். அப்போது தான் எமக்கு மதிப்புண்டு. கற்றவர்கள் அதாவது கல்வியுடையவர்கள் எங்கே சென்றாலும் அவர்களுக்கு மதிப்பு ஆனால் கல்வியில்லாதவர்களுக்கு மதிப்பில்லை. எனவே நாம் சிறுவர்களாக இருக்கும் போதே கல்வியைத் தேடிச் செல்ல வேண்டும். அப்படி ஒவ்வொருவரும் கல்வியை நாடினோமால் எமக்கும் எம் சமுதாயத்திற்கும் நல்லது.

கல்வியறிவுடையோரைக் கனவிலும் நினைவிலும் காண்பது அரிதாகவுள்ளது கல்விக்கு ஓர் அழகுண்டு

"குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சள் அழகும் அழகல்ல. கல்வி அழகே அழகு". என்று கூறப்படுகின்றது. ஆகவே நாம் கல்விக்காக நமது வாழ்நாளைக் கழிக்க வேண்டுமே தவிர வீண்விரயமாக்க கூடாது. நாம் கற்றால் மட்டும் போதாது அதற்கு ஏற்றவாறு வாழ்க்கையில் வாழ வேண்டும். கல்வி யறிவுடையவர்கள் சிலர் கல்வியைத் தீயவழியில் பயன்படுத்துகின்றார்கள். அவ்வாறு நாம் தீயவழிக்குச் செல்லாது தீயவழிக்குச் செல்பவர்களை நல்வழிக்கு வர அறிவுரைகள் கூறுதல் நன்று.

எனவேதான் கற்றதற்கேற்ப வாழத்தெரிந்தவனே மனிதன். இதுவே உண்மைக் கல்வியாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

ஆகவே நாம் கற்பதை குற்றமறக்கற்க வேண்டும் பின் அதற்கேற்றவாறு வாழப்பழக வேண்டும். இதுவே வள்ளுவப் பெருந்தகை எமக்கு கூறிய வழி ஆகையால் இவ்வாறு வாழ்வதே அறிவுடமையாகும். எனவே நாம் ஒவ்வொருவரும் எமது வாழ்க்கையை கல்விக்காக செலவழித்து வாழ முயற்சி செய்வோம்.



**ஆக்கம்**
**யோ.சுமிதா**

---

# அன்னையின் ஆட்சி

கொஞ்ச நாளைக்கு முதல்
அம்மா ஜனாதிபதி .. ..
ஆசனத்தின்
காலொன்று ஒடிந்து போயிற்று
திடீரென்று!
இப்போது எதுவுமேயில்லாது!
எல்லோரும் ஒன்று
சேர்ந்து சமாதானத்திற்காய்
ஏக்க விழிகளோடு
தூக்கமின்றி!
முடிவு கட்ட
இதற்கொரு
காவி உடுத்தியோரை ஏவி விட்டு
உசுப்பேற்றி
உண்ணாவிரதம் இருப்பதாய்
உருவாடவிட்டு
மூன்றுவேளை தான் இறுக்கி விட்டு
சட்டென சமாதான சந்நிதியின்
கதவையும் இறுகமூடி
எம்மூச்சை நிறுத்திட நினைப்பது
நியாயமா தேவி?!


**எஸ். டிலானி**
**சண்டிலிப்பாய் மகளிர் கல்லூரி**



# ஒரு பார்வை

இப்பொழுது யாழ்ப்பாணத்தில் பாபா திரைப்படம் வெற்றி நடை போடுகின்றது. சுமார் 3 வருடங்களின் பின் சுப்பர் ஸ்டார் நடித்துள்ள இப்படத்திற்கு பலத்த எதிர்பார்ப்பு இருந்தது. கதை, திரைக்கதை வசனம் என்பவற்றையும் ரஜனிகாந்தே செய்திருக்கின்றார். மனைவி லதா, பிள்ளைகள் ஐஸ்வர்யா, சௌந்தர்யா என்று முழுக் குடும்பமுமே உள்வாங்கப்பட்டிருக்கின்றது. இந்நிலைமை திரையுலகுக்கு புதுமையல்லத்தான் இருப்பினும் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது.

ரஜனியின் படங்கள் என்றாலே கலைத்துவம், அழகியல், வித்தியாசமான சிந்தனை முயற்சிகள், காட்சியமைப்புக்கள், கதையோட்டம் என்பவற்றை ஒதுக்கிவிட்டு சொல்ல வரும் கருத்து என்ன என்பதைப்பார்ப்பதே நன்மையாகும்.( ஏனெனில் இவை எதுவுமே வழமையாக அவரது படத்தில் இருப்பதில்லையே)



பாபா தயாரிப்பாளர்கள் திரைப்படத்தினூடாக தமது வளர்சசி பற்றி சிந்தித்திருப்பினும் திரைப்படத் துறை வளர்ச்சி பற்றி சிந்திப்பதை தவிர்த்திருப்பதாகவே எண்ணத் தோன்றுகின்றது. பிரபுதேவா லோறன்ஸ் போன்றவர்களின் திறமைகளை உள்வாங்கியிருப்பது ரஜனிக்கே உரிய பெருந்தன்மைதான். பாடல் காட்சிகளிலும் சண்டைக்காட்சிகளிலும் கூட ஹொலிவூட் அம்சங்களை உள்வாங்க நினைத்திருப்பது திரைத்துறை வளர்ச்சியா? ரசிகர்களை திருப்திப்படுத்த மேற்கொண்ட பிரயத்தனமா? என்பது பார்வையாளர்களுக்குரியது.

பாடல்கள் எதுவும் வழமையான ரஜனி பாணியில் அமையாவிட்டாலும் ரஹ்மானின் இசை அமைதியாக, பாராட்டும் படியாக அமைந்துள்ளது. மாயா மாயா , டிப்பு டிப்பு டிப்புகுமரி போன்ற பாடல்வரிகள் தத்துவ கருத்துகள் நிறைந்தனவாக பாடலாசிரியர்களால் படைக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிப்பதிவு அதிகமான தமிழ்ப்படங்கள் போல குழிவு வில்லை பார்வையாகவே அமைந்துள்ளது. மாற்றங்கள் செய்திருக்கமுடியும். ஆயினும் பாடல் காட்சிகளில் கமரா இயங்கிய முறை கவனிக்கத்தக்கது. காட்சியமைப்பில் சிறுவர்களின் விளையாட்டுப்போட்டி தெரிவு செய்யப்பட்டதும் பாராட்டுக்குரியது.

நகைச் சுவைப் பாத்திரங்கள் பிரதானப்படுத்தப்படா விட்டாலும் மூடக் கொள்கைகளை நாசூக்காக கிண்டலடிப்பது கதையம்சத்துக்கும் சொல்ல வந்த கருத்து நிலை வாதத்திற்கும் பொருத்தமாக உள்ளது.

கதையம்சம்; புராணக்கதைகளை பக்தி நிலையில் பிரதானப்படுத்திக்காட்டிய தமிழ்ப்பட வரலாற்றில் இது ஒரு புதிய சிந்தனைதான். எனினும் இடையிடையே அம்புலிமாமாக் கதைகளை ஞாபகப்படுத்துகின்றது. நாத்தியம், ஆத்திகம் போன்ற சமூகத்தின் சாதாரண சிந்தனைகளைத்தாண்டி படம் ஆன்மீகத் தெளிவைக்காட்டுகின்றது.

பட ஓட்டத்தில் குறிப்பிடக்கூடிய சில தொய்வுகள் பார்த்த உடனேயே தெரிகின்றது.மந்திரத்தினை பரீட்சிக்கின்ற இடத்தினில் மட்டுமல்ல அடுக்கு வசனங்களை அதிகமாக தேவையற்ற இடங்கள் சிலவற்றிலும்; சலிப்பூட்டுவதாக உச்சரிப்பது என்பவற்றைக் குறிப்பிடலாம்.


காதல் என்ற நிலையைக்காட்ட முற்பட்ட இயக்குனர் மனிஷா தலையில் பெட்டியைத்தூக்கி வைக்கிற காட்சியிலும் சரி பாடல் காட்சிகளிலும் சரி ஆண் பெண் ஈர்ப்பு நிலையைக் காட்டவில்லை. கடமைக்கு அக்காட்சிகளை நடித்தது போலவே இருந்தது. ரஜனியின் வயதும் திரைப்படத்திற்கு வெளியே ரஜனி மேலிருந்த மதிப்பும் தாக்கம் செலுத்தியிருக்குமோ என்னவோ?

மற்றப்படி ரஜனியின் "ஸ்டைலும்" நல்ல கருத்துக்களைக் கூறுவதிலும் பாபா முன்நின்றாலும் பாட்ஷா, முத்து போன்றவற்றோடு ஒப்பிட்டு கதை கூற முடியவில்லைதான். காரணம் இப்படத்தில் ஈடுபட்டிருந்தபோது ரஜனியிடம் ஆன்மீக செல்வாக்கு மிகைப்பட்டு இருந்ததாகவே இருக்க முடியும்.

பொதுவாக இந்து மதம் சார்ந்த காட்சிகளையே அமைத்திருந்தாலும் மத ஒற்றுமையை, உட்பிணைப்பை காட்டுகிறார். இமயமலையில் பாபாஜியைச் சந்திக்கும்போது கபீர்தாஸர் (முஸ்லீம்) இயேசுநாதர் (கிறிஸ்தவம்) போன்றவர்களுடன் பாபாவை தொடர்பு படுத்திப் பேசுகின்றார். "அல்லா அருணாசலா" என்று கடைக்குப் பெயர் வைப்பது, தன் குடும்பத்தில் சகல மத சகிப்பை காட்டுவதாகவும் காட்டப்படுவது ஒரு சில எடுத்துக்காட்டுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிக்கட்டத்தில் யாகம் செய்யும் ஆலமரம் மந்திரவாதிகள், அவர்களது உடைகள் மிகவும் நன்றாகவும் பொருத்தமாகவும் இருந்தன. அக்காட்சி படமாக்கப்பட்டவிதம் பாராட்டக்கூடியது. "சக்தி கொடு " பாடல் காட்சியில் ரஜனியின் நடிப்பு மாறியிருக்கலாம். அமைதியான வலுவான வேண்டுதலாக இருந்திருந்தால் ஆன்மீகம் பற்றிய கதைக்கருவுக்கு அது மேலும் வலுச் சேர்ப்பதாக அமைந்திருக்கும்.



நவீன தொழில் நுட்ப வளர்ச்சியில் கணனி கிராபிக்ஸை பயன்படுத்தி என்ன செய்யலாம் என்று நிறைய யோசித்திருக்கின்றார்கள். ஆனால் "வொலிபோல்" சண்டை "மரங்கள் தோன்றுதல்" போன்றவை மிகைப்பட்டு விட்டதாகத் தான் தெரிகின்றன.

இறுதியில் பாபா திரைப்படம் ரஜனி-ராமதாஸ் சர்ச்சை, தமிழக அரசுடன் ஏற்கனவே இருந்த முரண்பாடுகள் - பதிலடிகள், தமிழக திரையரங்குகளுக்கு மிரட்டல், ரஜனியின் அரசியல் பிரவேசத்திற்கான ஆருடம் கூறல் என்று பல கருத்துகளை உலவ விட்டிருக்கின்ற போதிலும் ரஜனி திரைப்படம் என்ற பொது நிலையில் ரசிகர்கள் எதிர்பார்த்த பாபா இதுவல்லத்தான்.



-புச்சியன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவும் ஆட்டுக் குட்டியும்



-சுழிபுரம் த. பிரபாகரன்-

ஆட்டுக் குட்டியள் ரண்டும் ஒண்டையொண்டு தள்ளிக் கொண்டு தாயாட்டின்ரை மடியில பால் குடிக்கிறதைப் பாக்கேக்க ஒரு சந்தோசமாக த்தான் கிடக்குது. நான் ஓவ்வொரு நாளும் இதுகள் பால் குடிக்கிறதைப் பாக்கேக்க எப்பவும் மணி (கிடாய்க்குட்டி) வலப்பக்க முலையிலையும் செல்வி (மறிக்குட்டி) இடப்பக்க முலையிலையும்தான் பால் குடிக்குங்கள்

ஒரு நாள் கூட அதுகள் முலை மாறிக் குடிச்சதை நான் காணேலை.

நான் ஆடுகளைப் பிராக்குப் பார்த்துக் கொண்டு நிக்கேக்க வாசல்ல ஆரோ வாற மாதிரிக் கிடந்திது. ஆரெண்டு எட்டிப் பாத்தன்.

அம்மாதான்!

வேத்து, விறுவிறுத்து, கையில உடுப்பு "பாக்கோட" வாறவாவைப் பாக்கப் பாவமாத் தான் கிடக்குது. "பாக்கை" ஒரு பக்கமாப் போட்டிட்டு அம்மா தொப்பெண்டு ஈசிச் சேருக்குள்ள சாஞ்சிட்டா.

கழுகுக்கு மூக்கில வேர்க்கிற மாதிரி அம்மா உடுப்போட வந்தது பக்கத்து வீட்டில விளையாடிக் கொண்டு நிண்ட செந்தூருக்கு என்னெண்டுதான் தெரிஞ்சுதோ? தெரியேலை. விளையாடின களைப்போட ஓடிவந்து உடுப்பு "பாக்கை" எடுத்து பிய்ச்சு, அதுக்குள்ள என்னென்ன கிடக்குதெண்டு நோண்டத் துடங்கிட்டான். அவன் அப்பிடிப் பிய்க்கிறதைப் பார்க்க எனக்கு குரங்கு கையில பூமாலை எண்ட பழமொழிதான் ஞாபகத்துக்கு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவின்ரை வெள்ளைச் சீலை , ரண்டு ரவுசர்த்துணி ரண்டு சேர்ட் பிளவுஸ் அன்ட்ஸ்கேட் எண்டு உள்ளுக்க இருந்ததை எல்லாம் எடுத்து வெளியில போட்டான் நான் என்ர சட்டையையும் ஸ்கேட்டையும் எடுத்துக் கொண்டு அறைக்குள் போய் அளவு சரியாய் இருக்குதோ எண்டு போட்டுப் பாக்கத் துடங்கேக்கதான் அம்மாவும் தம்பியும் கதைக்கிறது என்ரை காதில விழுந்தது.

"எணேய் அம்மா! இந்த இரண்டு ரவுசர்த் துணியையும் கொண்டுபோய் ரெயிலரிட்டக் குடுத்திட்டு வரட்டே?"

"உனக்கு எல்லாத்துக்கும் அவசரம்! இந்தா! ரெயிலரிட்ட தைக்கக் குடுக்கேக்க அளவைச் சரியாய் குடு பேந்து போனமுறை மாதிரி அங்க இழுக்குது, இஞ்சை இழுக்குது எண்டு என்ரை உயிரை வாங்காதை "

ரண்டு பேரும் கதைச்சு முடிக்கிறதுக்குள்ள நான் சட்டையையும் பாவாடையையும் போட்டுக் கொண்டு வெளியால வந்தன். அப்ப அம்மாவுக்கு என்னத்துக்கு எண்டு தெரியாமல் ரண்டு கண்ணும் கலங்கி போட்டுது .

'எணேய் இப்ப என்ன நடந்திட்டுது.? ஏனணை ஏன் இப்பிடி அழுகிறாய் ?"

"ஒண்டுமில்லையடி பிள்ளை"

எண்டாலும் அம்மான்ர மனசுக்குள்ள இன்னமும் அந்தக் கவலை இருக்கிற மாதிரி எனக்குப் பட்டுது. எப்பிடித்தான் கெஞ்சிக் கேட்டாலும் எங்கட அம்மாட்டயிருந்து ஒரு விசயமும் அறியேலாது. நைசா அம்மா குசினிப் பக்கம் போறதைப் பாத்தும் பாக்காத மாதிரி நான் கண்ணாடிக்கு முன்னால நிண்டு கொண்டு சட்டையை வடிவுபாத்தன். கொஞ்ச நேரம் செண்டிருக்கும். அம்மா இறுக்கி அழுகிற சத்தம் கேட்டுது. ஜன்னலுக்குள்ளால மெல்ல எட்டிப் பாத்தன். அம்மா விக்கி விக்கி அழுது கொண்டிருந்தா.

அம்மா ஒரு அஞ்சு வருசமா இப்பிடித்தான். ஒரு நல்ல நாள் பெரிய நாள் எண்டால் காணும். உடனே குசினிக்க போய் அழத் தொடங்கி விடுவா. அம்மாவை அவவின்ர பாட்டில அழ விட்டுவிட்டு நான் முத்தத்திலே காயப்போட்ட புழுக்கொடியலை எடுத்து கொண்டு வந்து உள்ளுக்குள்ள வைச்சுப் போட்டு நிமிரேக்க, அண்ணையின்ர படம் கண்ணிலை பட்டுது.

அண்ணை!

அவன் இப்ப எங்க இருக்கிறான்?

கஞத்துறையிலயா?

காங்கேசன்துறையிலேயா?

இல்லாட்டிச் சிலவேளை .. .. ?!

செம்மணிக்கையா.. ..?

'சீச்சீ !

அப்படியொண்டுமிருக்காது !

அண்ணாவுக்கொண்டும் நடந்திருக்காது.. ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அக்கா! உன்ரை சைக்கிளை ஒருக்கா தாறியே? ரெயிலர்க் கடை மட்டும் போட்டு வாறன்" என்ரை யோசினையைக் குழப்பிற மாதிரி செந்தூர் வந்து நிண்டான்.

"ஏன் உன்ரை சைக்கிளுக்-கென்ன? அதில போட்டு வாவன்?"

எண்டு சொல்லிப் போட்டு கொஞ்சம் அங்கால போனேன்.

ஆனாச் செந்தூரெண்ட குரங்கு என்னை விடுகிறதாய் இல்லை.

"அதக்கா.. .. முன்சில்லு காத்துப் போட்டுது. ரெண்டு மூன்று தரம் காத்தடிச்சுப் பாத்திட்டன். நிக்குதே இல்லை. அடிச்சவுடன காத்து போகுது"

"கண்ட கண்ட பத்தை பரட்டை வழியள்ல பெடியளோடை ஊர்மேய்ஞ்சு கொண்டு திரிஞ்சால் காத்துப் போகுந்-தானே.!"

என்ரை பேச்சைக் கேட்டு அவன் தலையைக் குனியேக்க மேசையில் கிடந்த சைக்கிள் துறப்பை எடுத்து நீட்டினன். ஒண்டும் பேசாமல் வாங்கிக் கொண்டு போட்டான்.

அம்மா ஒரு மாதிரி அழு-கையை நிப்பாட்டிப் போட்டுக் கிணத்தடிக்கு போய் முகம் கழுவிப் போட்டு வந்து றோட்டை உத்துப் பார்த்துக் கொண்டு வாசலில் இருந்தா. அவவைப் பார்க்க எனக்குப் பாவமாய் கிடந்திச்சு. கிட்டப்-போய் அவாவின்ரை தோளில கையை வைச்சன். என்ன? எண்டு கேக்கிற மாதிரி அவ என்னைத் திரும்பி பாத்தா!

"அம்மா நீ அழாதையணை எண்டைக்கோ ஒரு நாளைக்கு அண்ணை கட்டாயம் திரும்பி வருவான்!"

அம்மா ஒண்டும் சொல்லே-லை. என்னைக் கொஞ்ச நேரம் உத்துப் பார்த்துக் கொண்டு நிண்டா. பேந்து தன்ரை பாட்டில

" ஓ! அவன் வருவான். அம்மாவைத் தேடி வருவான்.."

எண்டு முணுமுணுத்தா.

நான் இனியும் அண்ணை-யைப்பற்றி ஏதும் கதைச்சா அம்மா அழுது போடுவா எண்டு சொல்லாமலே எனக்கு தெரிஞ்ச-தாலை போசாமல் அங்காலிப்பக்கமாப் பாக்கத் தொடங்கினன்.

திரும்பவும் ஆட்டுக் குட்டியள் பால் குடிக்கிறது கண்ணிலை பட்டுது.

அம்மாவோடை அண்-ணையைப் பற்றிக் கதைக்காமல் இருக்கிறதுக்காண்டி கொஞ்ச நேரம் அதுகளைப் பிராக்குப் பார்த்துக் கொண்டிருந்தன்

தாயாடு ரண்டு குட்டி-யளையும் தன்ரை முகத்தாலை தேய்ச்சு தேய்ச்சு அதுகளுக்கு தன்ரை அன்பைக் காட்டிக் கொண்டிருந்தது. இப்பவும் மணி வலப்பக்க முலையிலையும செல்வி இடப்பக்க முலையி-லையும் தான் பால் குடிக்கு துகள். எப்படி இதுகள் ரண்டும் இப்பிடி வலப்பக்க முலை உனக்கு, இடப்பக்க முலை எனக்கு எண்டு பிரிச்சு வைச்சுக் குடிக்குதுகள்? அப்ப-டிப் பிரிச்சுப் பாக்கிறதைத்தானே ஆறாவது அறிவு எண்டு சொல்லுகினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியெண்டால் ஆடுகளு-க்கும் ஆறறிவு இருக்குதோ ?

இப்படி நான் கண்டபடி யோசிச்சுக் கொண்டிருக்கேக்க தான் நான் கனவிலையும் நினைச்சுப் பாக்காத அது நடந்தது.

செல்வி தாயிட்ட பாலைக் குடிச்சிட்டு ஓட
செல்வியைத் துரத்திக் கொண்டு சந்தோசத்தில் பின்னால மணி ஓட -
செல்வி இன்னும் இறுக்கி ஓட-
இதுவும் துள்ளிக் கலைக்க-
அது கிணத்துக் கட்டைத் தாண்டிப்பாய
மணியும் பாய -
இடையில் கட்டுத் தடுக்கி மணி "பொத்" எண்டு கிணத்துக்குள்ள விழுந்துட்டுது.!

"ஐயோ!"

கத்திக் கொண்டு கிணத்த -டிக்கு ஓடினன். எனக்குப் பின்னால அம்மாவும் ஆத்துப் பதைச்சுக் கொண்டு ஓடி வந்தா. கிணத்துக்குள்ள மணி கொஞ்ச நேரம் நீந்த வெளிக்கிட்டு பேந்து ஏலாமல் போக தண்ணிக்குள்ள கீழ போறதும் பேந்து மேல வாறதுமாய் இருந்திச்சுது.
எனக்கெண்டால் ஒரே அந்தர -மாப் போட்டுது. என்னெண்டு மணியைக் காப்பாத்துறதெண்டு தெரியேலை. துலாவை நல்லா -ய்த் தாட்டு, மணி ஏறி வரட்டுமெண்டு வாளியை அதுக்கு கிட்ட விட்டன். ஆனால் தண்ணிக்கை கன நேரம் நிண்டதால அதின்ர உடம்பு விறைச்சுப் போட்டுது போல. அது வாளிக்கை ஏறவேயில்லை. இந்த நேரம் பாத்து செந்தூரும் ரெயிலர்கடைக்கு போட்டான். இல்லாட்டிக்கு இத்தறிக்கு கிணத்துக்க குதிச்சு மணியைத் தூக்கியிருப்பான். மெல்ல மெல்ல மணி சோர்ந்து போற மாதிரி தெரியுது!

"ஐயோ ! அம்மா அது.. ..
கிணத்துக்கை தாழுது!
அப்பாடா! பிறகு ஒரு மாதிரி தன்னால ஏலு மட்டும் காலை அடிச்ச அடிச்சு மேலே வரப் பாக்குது. பேந்து கிணத்துக் கட்டில கத்திக் கொண்டு நிண்ட தன்ர தாயையும் செல்வியையும் அம்மாவையும் என்னையும் வடிவாய்ப் பார்த்திட்டு -
'ப்ளுக்'!
மணி தண்ணிக்குள்ள தாண்டு கீழே போட்டுது திரும்ப வரும் என்று பார்த்தேன் வரேலை!
"ம் ம் மேய்ய்ங் .. .. .. ம் ம் மேய்ய்ங் .. .. .."

தாயாடு கத்திக் கொண்டே கிணத்தைச் சுத்திச் சுத்தி வந்து கொண்டிருந் திச்சுது. எனக்கு அதைப் பாக்க "டப்" பென்று அம்மாவின்ர ஞாபகந்தான் வந்திது. அவாவும் இப்படித்தானே... ..!
அண்ணாவை அவங்கள் பிடிச்சுக் கொண்டு போகேக்கை கத்தியழுதவா! அம்மாக்கும் தாயாடு கத்துற -தைப் பார்த்தவுடன அண்ணை -யின்ர ஞாபகம் வந்துட்டுது போல கிடக்குது! அவவும் அழுது கொண்டு தாயாட்டின் முதுகில,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்லத் தடவி விட்டா. அது அவவின்ர முகத்தோட தன்ரமுகத்தை தேய்ச்சு தேய்ச்சு இன்னமும் இறுக்கி கத்த தொடங்கி விட்டுது.

அதுக்குள்ள செந்தூா -ரும் வந்திட்டான்.

"என்னனையக்கா! எல்லாரும் கிணத்தடியில நிண்டு ஒப்பாரி வைக்கிறியள்?"

"செந்தூர் எங்கட மணி கிணத்துக்கை தவறி விழுந்து-ட்டுது"

"மணியோ? கிணத்துக்-கையோ?"

'அவ்வளவுதான்'!

'சளக்'!

தம்பி கிணத்துக்கை குதிச்சிட்டான்.

கொஞ்ச நேரத்தால துலாக் கொடியில் மணியைக் கட்டி ஒரு மாதிரி மேலே கொண்டு வந்திட்டான். மணி-யைக் கண்டவுடன் தாயாடும் செல்வியும் ஓடிவந்து அதை மூசி மூசி மணந்து பாத்திட்டு பேந்து திரும்பவும் பழையபடி கத்தத் தொடங்கிட்டுதுகள். மணி செத்துப் போச்செண்டு எனக்கு விளங்கிட்டுது. நானும் அழத் தொடங்கிட்டன்.

மணி செத்துப்போய் மூண்டாம் நாள் பின்னேரம். இஞ்சி திண்ட குரங்கு மாதிரி ஒரு மாதிரியாய் முகத்தைக் வைச்சுக் கொண்டு செந்தூா் எனக்குக் கிட்ட வந்து நிண்டான். என்னவோ ஒரு பிழை செய்து போட்டானெண்டு வடிவாய் விளங்கிட்டுது.

"என்னடா?"

"ஒண்டுமில்லையக்கா!"

எண்டிட்டுப் பின்னால ஒளிச்சு வைச்சிருந்த தன்ரை ஜீன்ஸை எனக்கு முன்னால நீட்டினான். ஜீன்சின் பின் பக்கம் "ட" வடிவில் கிழிந்து தொங்கியது.

"ஏன்ரா ? இப்படிக் கிழிஞ்சது?"

"அது வந்தக்கா. .. .. ஜீன்ஸை ஆணியில் கொழுவி-யிருந்தனான். இண்டைக்கு ரூபன் மாஸ்ரரின்ரை கலியாண வீட்டு ரிசப்சனுக்கு போறதுக்-காண்டி அவசரத்தில எடுக்கேக்க ஆணியில கொழுவு -ப்பட்டு.. .."

"சரி ! அப்படியெ-ண்டால் மற்ற ஜீன்ஸைப் போட்டுக் கொண்டு போவன்"

"மற்ற 'ஜீன்ஸை' நேற்றுத்தான் லோன்றியில குடுத்தனான்"

அண்டைக்கு அம்மா வாங்கிக் கொண்டு வந்த துணியையும் ரெயிலர் இன்னும் தைக்ககேல்லையாம். இல்லாட்டி அதையாவது போட்டுக் கொண்டு போகலாம்"

"இப்ப என்னெண்டடா ரிசப்சனுக்கு போகப்போறாய்?"

"அதுதானக்கா எனக்கு -ம் தெரியேல்லை"

அவனைப் பார்க்கப் பாவமாய் கிடந்திது. என்ன செய்யிறதெண்டு ஒரு நிமிசம் யோசிச்சன். என்ரை கஸ்ர காலத்துக்கு அப்பதான் எனக் -கு அந்த யோசனை வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செந்தூர் ! அம்மா எங்களுக்குஉடுப்பெடுக் கேக்க அண்ணைக்கும் எடுத்து அலுமா ரிக்குள்ள வைச்சிருக்கிறாவெ-ல்லோ. அதில ஒரு ஜீன்ஸை நைசாய் எடுத்து தாறன் நீ இண்டைக்கு மட்டும் அம்மாவுக்கு தெரியாமல் போட்டுக் கொண்டு போட்டு திருப்பிக் கொண்டுவந்து வைச்சுப்போடு!"

என்ரை யோசினைக்கு அமெரிக்காவின்ர பேச்சைக் கேக்கிற அயல் நாடுகள் போல தலையாட்டி "ஓ"மெண்டு செந்தூர் சொன்னான்.

பிறகு செந்தூர் அலுமாரித் துறப்பை வீடு முழுக்க தடவி குசினிக்க கிடந்துஎடுத்துக் கொண்டு வந்து என்னட்டை தந்தான். நான் அம்மா எங்க எண்டு நோட்டமிட்டன். கிணத்தடியில அம்மா உடுப்புத் தோய்ச்சுக் கொண்டு நிக்கிறது எனக்கு கிறிலுக்குள்ளால தெரிஞ்சுது எனக்கு நெஞ்சு படபடவெண்டு அடிச்சுது. நான் அலுமாரியைத் திறந்து அண்ணைக்கெண்டு அவ சேர்த்து வைச்சிருக்கின்ற உடுப்பை எடுத்தனான் எண்டு தெரிஞ்சால்..பேந்து மனிசி என்னைச் "சிப்பிலி" ஆட்டிப் போடும்.

இதுதான் சரியான நேரமெண்டிட்டு சாமியறைக்க போய் துறப்பைப் போட்டு அலுமாரியைத் திறந்தன். அந்த அலுமாரிக்குள்ள "என்லார்ஜ்" பண்ணின பெரிய படத்தில அண்ணை சிரிச்சுக் கொண்டு இருந்தான். அவன்ரை படத்துக்கு கீழ சேட்டுகளும், ரவுசர்களும் அவனுக்குப் பிடிச்ச பலகார பைக்கற்றுக்களும், அவன்ரை சங்கிலி, மோதிரம் மணிக்கூடு எண்டு ஊரிப்பட்ட சாமான்கள்.. .. .. !

எனக்கு ஒரு பக்கம் அண்ணையை நினைச்சு அழுகையும், மற்றப்பக்கம் அம்மா இப்பிடி காசைக்கொட்டி இதுகளை வாங்கி வீணாப்பூட்டி வைச்சு அநியாயமாக்கிறதைப் பாத்து ஆத்திரமும் வந்தது.

"ஏனடி அலுமாரியைத் திறந் - தனீ?"

எனக்குப்பின்னால அம்மாவின்ர ஆத்திரக் குரல். பயத்தோட திரும்பினன். அம்மாவைப் பாக்க எனக்குப் பத்திரகாளியின்ர ஞாபகம் வந்தது .

"அது வந்தணை உவன் செந்தூர்தான் ஜீன்ஸ் ஒண்டு இதுக்குள்ள எடுத்துத் தரச் சொன்னவன். அதுதான் .. .. "

"பளார்! "

அம்மா அடிச்ச அடியில என்ரை வலப்பக்க கன்னம் ரத்தம் மாதிரிச் சிவத்துப் போட்டுது.

"உந்த அலுமாரிக்கை இருக்கிறதெல்லாம் கொண்ணைக்கல்லோ! அதை எப்பிடியடி நீ எடுப்பாய்?.அவன் செந்தூர்தான் சின்னப்பொடியன். ஜீன்ஸை எடுத்துத் தா எண்டு கேட்டா உடன நீயும் இது தான் சாட்டெண்டு அலுமாரிக்கை என்ன கிடக்கு தெண்டு தோண்டிப் பாக்கிறதோ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மான்ரை இந்த "தோண்டிப் பார்க்கிறதோ" எண்ட சொல்லைக் கேட்டவுடன எனக்கு இனிமேல் இல்லை யெண்டளவிற்கு கோபம் வந்திட்டுது.

"ஓமோம்! தோண்டிப்பாக்கிற - துக்கு உதுக்குள்ள பெரிய பொக்கிசமோ வைச்சிருக் - கிறியள்?

எப்பவோ அவங்கள் பிடிச்சுக் கொண்டு போனவ - னுக்கு, உடுப்பும், நகையும் சாப்பாடும்தானே வைச்சிருக் கிறாய். உனக்கு விசர் முத்திப் போச்சுது. இல்லாட்டி இப்பிடிக் காசை அநியாயம் பண்ணி அண்ணனுக்குப் பிடிச்சதை எல்லாம் வாங்கிப் பொத்திப் பொத்தி அலுமாரிக்கை வைச்ச -ருப்பியோ?. ஊரில எத்தினை பேர் காணாமல் போட்டினம். அவையின்ரை தாய் தேப்ப - னெல்லாம் இப்படியோ தங்கட காணாமல் போன பிள்ளைய - ளுக்கு உடுப்புகள் வாங்கிக் குவிக்குதுகள்?.

உன்ரை பிள்ளையில பாசமெண்டு ஊர் உலகத்துக் - குக் காட்டுறதுக்கு தானே இப்படியெல்லாம் சேர்த்து வைச்சிருக்கிறாய்?"

ஆத்திரத்தில மரியாதை - யில்லாமல் அம்மாவைப் பேசிப் போட்டன். இன்னும் கனக்க கதைச்சிருப்பன் அதுக்குள்ள அம்மா "ஓ" வெண்டு அழத் தொடங்கிட்டா. இனியும் நிண்டெனென்டால் வீண்சோலி - தான் வருமெண்டிட்டு வெளியில போட்டன். ஊருலகத்துக்கு அண்ணனில பாசமெண்டு காட்டத்தான் இப்பிடி அம்மா அண்ணனுக்குத் தேவையான எல்லாத்தையும் வாங்கி வைச்சி -ருக்க வேணும். அப்படியில்- லாட்டி அம்மாவுக்கு விசராயி - ருக்க வேணும். நான் அம்மாவைப் பேசினதில என்ன பிழை.?

"ம்மேய் ய்ய் ய்ங்! "

என்ரை கவனத்தை செல்வியின் முனகல்சத்தம் திசை திருப்பிப் போட்டுது. என்னெண்டு பாத்தன்.

தாயாடு செல்வியை தலையால இடிச்சுத்தள்ளிக் கொண்டு நிண்டுது.

தாயாட்டின்ர இடப்பக்க முலையில பால் எப்பனும் இல்லை வலப்பக்க முலை பெரிசாய் பலூன் மாதிரி ஊதிப்போய் நிரம்பிக் கிடந்திச்சுது. அதைக் குடிக்கிற துக்கு செல்வி எவ்வளவோ பாடுபட்டும் தாயாடு விடவே - யில்லை.

சிலவேளை .. .. .. ..

எங்கட அம்மா மாதிரித்தான் தாயாடும் தன்ரை மகன் மணி க்காணடித்தான் அது குடிச்ச முலையில பாலைச் சேர்த்து வைச்சிரு - க்குதோ?

அப்படி மணிக்கெண்டு சேத்து வைச்சிருந்தால் அதைச் செல்வி குடிக்கவிடாமல் தாயாடு இடிக்கிறதுக்கு என்ன காரணம்?. செல்வியும் அதின்ரை குட்டிதானே! அதுக்கு விசரோ?! இல்லாட்டி மணி திரும்பி வந்து குடிக்குமெண்ட நம்பிக்கையோ?.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்ப அம்மாவும் அப்படி அண்ணா கட்டாயம் திரும்பி வருவான் எண்ட நம்பிக்கையிலதானோ அந்த உடுப்புகளையெல்லாம் சேத்து வைச்சிருக்கிறா? அப்படியெண்டால் பாசம் எண்டு ஊருக்கு காட்டுறதுக்காண்டியோஇல்லாட்டி விசரிலையோஇப்படி யெல்லாம் செய்யேலை! அண்ணன் வருவானெண்ட நம்பிக்கையில தான் இப்பிடி உடுப்புக்களும் நகையும் சாப்பாடும் வாங்கிச் சேத்து வைச்சிருக்கிறா!மனம் தெளிஞ்ச மாதிரி ஒரு உணர்வு.

சாமியறைக்க சத்தம் போடாமல் போனன். இன்னமும் அம்மா அழுது கொண்டிருந்தா. நான் ஒண்டும் கதைக்காமல் கீழே விழுந்து கிடந்த அண்ணையின்ரை உடுப்புக் களை எடுத்து அலுமாரிக்க அடுக்கி வைச்சன். அம்மா இப்ப எழும்பி என்னையும் கட்டிப் பிடிச்சுக் கொண்டு அழத் தொடங்கிட்டா. வெளியில தாயாட்டிட்ட செல்வி அடிவாங்கி அலறும் சத்தம் இன்னமும் கேட்டுக் கொண்டு இருந்தது.

(யாவும் கற்பனையல்ல.)

அறையில் ஆடியது, அரங்கேற்றம் ஆகிய பகுதிகள் புதிய எழுத்தாளர்களுக்கானது. அறையில் ஆடிய உங்கள் கால்கள் இனி அம்பலத்தில் அரங்கேறட்டும். இலக்கியத் திறனை உங்களுக்குள்ளே பூட்டி வைத்திருக்கும் எழுத்தாளர்களே! தாமதிக்காமல் இப்பகுதிக்கு உங்கள் பெயர் முகவரியோடு ஆக்கங்களை எழுதி அனுப்புங்கள். ஒருவரது ஆக்கம் இப்பகுதிகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு முறை மட்டும் பிரசுரமாகும்.

*இனியென்ன?*
*உங்கள் முன்னே உள்ள பெருங்கல்லை*
*சிலையாக்கச் சிந்தியுங்கள்*
*சாணைபிடித்தத் போதும்*
*வாளை எடுங்கள்*

(ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றும்

இந்நா ளெல்லாம் எங்கள் வீட்டுப்
பொன்னெச் சிச்செடி பூத்துச் சொரியும்!
முல்லையும், அருகில் மல்லிகைக் கொடியும்
"கொல்"லெனச் சிரித்துக் கொண்டிருக்குங்"கள்"
அல்லவோ? வயல்கள் எல்லாம் பச்சை
நெல்நிறைந் திருக்குமென் நாட்டில்! பாட்டுப்
பாடாத உழவன் பாடுவான்! துலாக்கள்
ஆடாது நிற்கும் அன்றோ இன்றே!

யாழ்ப்பா ணத்தை யான்அடை யேனோ?
சூழ்ப்பா னையின்முன் கூடிக் குந்தி
இருந்திலை கோலி, இடுப்பில்இட் டுட்டிய
கரந்தெரிந் தூற்றும்அவ் விருந்தருந் திலனேல்
பட்டினி போக்கா பழம், பால், இவ்வூர்
"ஓட்ட"லின் முட்டை ரொட்டிகள்! அன்னை
பழஞ்சோற் றுண்டி கிழங்கொடு பிசைந்து
வழங்கலை நினைத்தால் வாயூ றாதோ?



கடவுளே! உடனே உடுத்துக் கொண்டு,
அடுத்த ரயிலைப் "பிடித்து"க்கொள்கிறேன்!
யாழ்ப்பா ணத்தை யான்அடை வேனே!
தாழ்ப்பாள் இட்டுத் தனிப்பெட் டியிலே
நித்திரை போய்ப்பின் நிமிர்ந்து பார்த்தால்,
அத்தரை அன்றோ! அடடா, அந்தப்
பெற்றபொன் னாட்டைப் பிரிந்தினி மேலே
சற்றும்இக் கொழும்பில் தங்கேன்! இங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முலைஇளம் முளைகள் முனைந்தெழு வதனைக்
கலைகுறைத் தணியும் கன்னியர் காட்டவும்
"தலைஇழந் தே" நாம் தடங்தோள் ஒளிக்கும்
சட்டைகள் கைகள் முட்ட இட்டும்
பட்டிகள் கழுத்தை வெட்ட விட்டும்,
கொட்டிலும் வியர்வையிற் குமைவதா? இவற்றை
விட்டெறிந் தெண்சாண் வேட்டி கட்டி
முட்டொழி யலாம்அம் மூதூர் செல்வேன்!

நன்றி
வள்ளி - ஆடி 1955

## இன்றும்

## மீண்டும் எம்ஊர்

இரண்டாண்டின் முன்பு
இடம் பெயர்ந்து - இப்போது
தடம் பதிக்கும் ஆவலுடன் நாம் .. ..
முன்னர் எப்படி இருந்ததெனச் சொல்வது பழமை.. .. ..
இப்போ திருப்பதைச் சொல்வதே யாதார்த்தம் .. .. ..

வீடுகளைப் பார்க்கின்றேன்: மனங்களைப் போலவே
முற்றாக அழிந்தும், பாதி இடிந்தும்.. .. ..
வடுக்களை சுமந்தபடி வரவேற்றன.


காணிகள் யாவும்
பலகை இன்றியே பக்குவம் உரைத்தன.
கண்ணி வெடிகள் .. .. கவனம்.. ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவாறு தப்பிப்பிழைத்த ஒரு சில நாய்கள்
ஊழையிட்டு வாலையாட்டின.
துக்கமா? சந்தோசமா ??

உயிர்ப்பினை இழந்தும் உறுதியாய் நின்றன
தென்னைகள்! பனைகள்!!
பச்சைக் குழந்தைகளைப் பிரசவித்துப்
பலன் கொடுக்கும் நெல் வயல்கள்
சிவப்புடுத்தி .. .. மொட்டையாகி .. .. சிலவேளை அவை
பிக்கு (ணி) கள் ஆயினவோ?
இனி அவற்றிற் பிறப்பில்லையோ??
கண்ணி வெடிகள் கொண்டு அரசியலில் நுழைந்தனவோ???

கோயிற் சுவர்கள் கொட்டுண்டு கிடந்தன
அட! காணாமற் போயிருந்தார் கடவுள்!!
(பெயர் - கடவுள் ; சிறப்புப் பெயர் - முருகன்
சொந்த முகவரி - நாவற்குழி கிழக்கு, நாவற்குழி
காணாமற் போனது - 11 - 05 - 2000)
ஊரின் இடமெங்கும் தடவி
ஊர்ந்து வரும் காற்றை
ஆழ்ந்து சுவாசித்து - மனநிறைவில்
மீண்டும் வருவேன் என விடை கொள்கின்றேன்
சொந்த ஊருக்கு!
வந்து சேர்கிறேன் வாடகை வீட்டுக்கு !!



-உதயோன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணமும் எண்ணமும் - 01

**ரூபா 100/= பரிசு பெறும் கவிதை.**

## தேடல்

தனிமம் .. .. 'ம்'
கனவுகளுடன் .. .. !
கட்டிய மனைவியுமில்லை
கடைசிக்காலத்தில்
கொள்ளி வைக்கக் கூட
பெற்ற பிள்ளையுமில்லை!
ஆசையாய் நான்
சிறுக சிறுக சேர்த்த குடிசையில்
என் மண்ணில்.. ..
நிம்மதியில்லை !
ஆசைகள் புதைக்கப்பட்டு
கவனிப்பார் யாருமின்றி.. ..!
கண்ணீருடன் என் வாழ்வு
பயணிக்கின்றது
முதியோர் இல்லம் தேடி.. ..



ப. தர்மினி
யாழ். பல்கலைக்கழகம்

**பாராட்டுப் பெறும் கவிதை**

*ஒற்றையாய் நிற்கும் மனையில்*
*பச்சையாய்ப் படரும் குப்பைகள்*
*பற்றுபசை அற்றுக்கருகிவிட்டன.*
*வெட்டையாய் வீசும் காற்றுக்கு*
*மனை நடுக்கம் கண்டாலும்*
*அத்திவாரம் உறுதி குலையவில்லை*

-சுரதா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம்!!!

## அதுவே எங்கள் தாரக மந்திரம்

- ☑ மஞ்சள்
- ☑ ஏலம்
- ☑ கஜு
- ☑ இறைச்சிக்கூடுகள்
- ☑ நீலம்
- ☑ பீடா

போன்ற இன்னோரன்ன பொருட்களை தரமான முறையில், சுகாதார முறைப்படி தயாரித்து மொத்தமாகவும், சில்லறையாகவும் விநியோகிப்போர்:




# வெங்கடநாதா சிறு கைத்தொழிலகம்

நவாலி வடக்கு மானிப்பாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூல்களுக்கான பணம் விரயமல்ல சேமிப்பே**



**அதிகமாக குளிர்பானங்கள் சாப்பிடுவது உடல்நலத்திற்கு கே[redacted]**

**அதிகமாக வாசிப்பது மனிதனை பண்படுத்தும்**



- கட்டிடப் பொருட்கள்
- தரமான பிளாஸ்ரிக் கதிரைகள்
- கயிறு வகைகள்
- இரும்பு குழாய்கள்
- கம்பிகள்

# யாழ்ப்பாண இரும்பகம்

[redacted]லி வீதி, யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org